DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.28/2024**
Prosecution witness **PW.6 (LW.8)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Dr.Rajeshwari | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1, A2 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **19.11.2025**

**19.11.2025 முதல் விசாரணை** :

1. நான் தற்போது சென்னை அயனாவரம் ESI மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு குன்னூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்த போது 09.02.2024 ம் தேதி மதியம் 12 மணிக்கு நான் பணியிலிருந்த போது அ.சா.1 தனபால் சிகிச்சைக்காக ஆஜரானார். அவரை விசாரித்த போது தனக்கு தெரிந்த நான்கு நபர்கள் கட்டை மற்றும் தடியினால் 08.02.2024 ம் தேதி இரவு 08.00 மணியளவில் தனது வீட்டின் அருகே வைத்து தாக்கியதாக கூறினார்.

3. அவரை பரிசோதித்த போது அவரின் இடது கண் பக்கவாட்டு பகுதியில் 2 x 2 cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. மேலும் கட்டையால் அவரது வாயில் அடித்ததால் முன் பல்லில் வலி இருப்பதாகவும் கூறினார். அவரை வெளிநோயாளியாக சிகிச்சையளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். (**அ.சா.1 ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆகும், அ.சா.1 ன் காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும்**) வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :–

மேற்படி சிராய்ப்பு காயம் ஒரு நபர் கரடுமுரடான பகுதியில் நிலைதடுமாறி கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பல்லில் ஏற்பட்டதாக சொல்லப்படும் வலி ஒரு பாவணையாக கூட இருக்கலாம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2025.11.19 18:03:06 +0530

Judicial Magistrate,
Coonoor.